Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

மலர் 2 25-6-1985 செவ்வாய்க்கிழமை (ஆனி 11 ஷவ்வால் 6) முழக்கம் 140

## இன்றிரவு மெயில் ரயிலில் பேர்த், ஸ்லீப்பெரெட்ஸ் வசதிகள்

இன்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும் இரவு மெயில் ரயிலில் படுக்கை வண்டி (பேர்த்), உறங்கிருக்கை வண்டி (ஸ்லீப்பெரெட்ஸ்) ஆகியனவும் வழக்கம் போல இணைக்கப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவைகளை இன்று காலை முதல் யாழ் புகையிரத நிலையத்தில் பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள முடியும். இன்று முதல் தினசரி இங்கிருந்து கொழும்புக்கு மெயில் ரயில் செல்லும். இரு வருடங்களின் பின்னர் இச் சேவை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# பூநகரியில் ராணுவ தீவிரவாதிகள் மோதலில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக நேற்று பூநகரியில் இருபகுதியினருக்குமிடையே இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் தீவிரவாத இளைஞர் ஒருவர் பலியாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி இராணுவ முகாமில் உள்ள இராணுவ வீரர் ஒருவர் சுகயீனமடைந்ததாகவும் அவரை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துவிட்டு அவருக்கு காவலாக சுமார் பதினைந்து வீரர்கள் நின்றதாகவும் அப்போது ஜீப் ஒன்றில் வந்த தீவிரவாதிகள்குழு இராணுவத்தினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இராணுவத்தினர் திருப்பிச் சுட்டதில் தீவிரவாத இளைஞர் ஒருவர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து தீவிரவாதிகள் எஸ் எல் ஆர் ரக துப்பாக்கிகளையும், ஜீப்பையும் கைவிட்டு விட்டு தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

— 6 ஆம் பக்கம் பார்க்க

★ ராஜீவை அமெரிக்காவில் கொலைசெய்யப் பயமுறுத்தல் விடுத்த

# சீக்கியர் குழு திடீர் தலைமறைவு; அமெரிக்க பொலிஸ் தேடுதல்!

## மொண்டியோவில் இரு பயணிகள் கைது; குண்டுவெடிப்பு பற்றி மேலும் பல தகவல்

(புதுடில்லி)

இந்திய ஜம்போ ஜெட் விமானம் நேற்று முன்தினம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு 329 பேர் கொல்லப்பட்டது தொடர்பாக, பிரதமர் ராஜீவ் காந்திக்கு கொலைப்பயமுறுத்தல் விடுத்த அமெரிக்காவில் வசிக்கும் சீக்கியர் குழுவைக் கைது செய்வதற்காக முழு முயற்சிகளையும் அமெரிக்க புலனாய்வுத்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். அதேவேளை இக்குழுவினர் வழக்கமான இடத்திலிருந்து திடீரெனத் தலைமறைவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேஷ பொலிஸ் கோஷ்டி ஒன்று தனது தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளது. முக்கியமான சில சீக்கியர்கள் எந்த வேளையிலும் கைதாகலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மொண்டியோ விமான நிலையத்தில், இக்குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டதென சந்தேகிக்கப்படும் இரு பயணிகள் சந்தேகத்தில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய ஜம்போ ஜெட் குண்டு வெடித்து, இரண்டு தடவைகள் குத்துக்கரணம் அடித்து, நொருங்கிச் சிதறி அத்லாந்திக் கடலில் வீழ்ந்ததை மற்றொரு விமான ஓட்டியும், சில மீனவர்களும் கண்டதாக வெளிநாட்டுச் செய்தி

--6ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி அதிர்ச்சியும் அனுதாபமும்

இந்திய விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 329 பேர் பலியானதையிட்டு ஜனா

— 6ஆம் பக்கம் பார்க்க

## ஆலாலு, தர்பர் தாமதத்தால் பேச்சுக்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணத்திலிருக்கும் கூட்டணி முன்னாள் எம் பிக்களான இருவாளர்கள் ஆலாலசுந்தரமும், தர்மலிங்கமும் கொழும்பு செல்லும் வரைக்கும் கூட்டணிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருக்கும் கூட்டணி எம். பிக்களான கலாநிதி நீலன் திருச்செல்வமும், பி. சூசைதாசனும் இந்த முடிவை எடுத்துள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

திரு. வி தர்மலிங்கத்தின்

—6ம் பக்கம் பார்க்க

### குண்டுப்புரளி

நேற்று இரவு லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தில் தரித்து நின்ற எயர் இந்திய ஜம்போ ஜெற் விமானமொன்றில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக வெளியான செய்தியை அடுத்து விமானத்திலிருந்த பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டபின் விமானம் சோதனையிடப்பட்டது.

ஒரு பிரசுரத்தின் எச்சரிக்கை:

# மொசாட், சி.ஐ.ஏ.யின் தந்திரமே போர் நிறுத்தம்; ஏமாறக் கூடாது!

பேச்சுவார்த்தை உடன்பாடு என்று சிங்களத் தலைவர்களை நம்பி மீண்டும் மீண்டும் ஏமாந்த எம் அரசியல் தலைவர்களைப் போல இன்றைய இளம் விடுதலைப் போராளிகளும் ஏமாந்து விடக் கூடாது என்று நேற்று வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் என்று குறிப்பிடப்பட்டு வெளியிடப் பட்டுள்ள இப் பிரசுரத்தில் வஞ்சகத்திற்குப் பெயர்போன மொசாட்டினதும் சி. ஐ ஏயினதும் சதித்திட்டமே இத்

—6-ம் பக்கம் பார்க்க

### இரவும பகலும பொலிஸ் சேவை

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலுள்ள ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதி நேற்று முதல் தொடர்ந்து இரவு நேரமும் அதன் கடமையை நீடித்துள்ளது. இதுவரை காலம் பகலில் மட்டும் இது இயங்கியது.

## 30,000 கலன் எரிபொருள் நேற்று ரயில் மூலம் வந்தது

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக எரிபொருளுக்கு நிலவி வந்த பெரும்தட்டுப்பாடு அடுத்த ஓரிரு தினங்களில் நீங்கிவிடுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

எரிபொருள் ரயிலொன்று நேற்று யாழ்ப்பாணம்வந்தது. இதல் பெற்றோல் பத்தாயிரம் கலனும், டீசல், மண் எண்ணெய் ஆகியனவும் தலா பத்

—6 ஆம் பக்கம் பார்க்க

வேலையை இழக்கும் நிலையில்

## ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் ஊழியர்கள் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச்சங்கத்தில் அண்மைகாலமாக இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களால் இதன் நூற்றுப்பத்து ஊழியர்கள் தமது வேலையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த ஊழியர்கள் நேற்று முதல் இச்சங்கத்தின் முன்பாக உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

—6 ஆம் பக்கம் பார்க்க

கட்டுநாயக்காவில்

### கடுமையான பாதுகாப்பு

கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்படவுள்ளன. விமானத்தில் ஏற்றப்

—6ஆம் பக்கம் பார்க்க

யாழ். பொது நூலகத்துக்கான

## தமிழக அன்பளிப்பு நூல்களை ஆணையாளர் இன்று ஏற்பார்

தமிழ் நாடு அரசினால் யாழ். பொது நூல் நிலையத்திற்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட புத்தகங்களை இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸித் இன்று யாழ் மாநகர சபை ஆணையாளர். திரு சி வீ.கே. சிவஞானத்திடம் கையளிப்பார். இவ்வைபவம் இந்தியத் தூதரகத்தில் நடைபெறும்.

சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான இப்புத்தகங்கள் தமிழ் நாடு அரசினால் இரண்டு வருடங்களுக்கு முன்

-6 ஆம் பக்கம் பார்க்க

### வாகனம் திரும்பிவந்தது

(கிளிநொச்சி)

கடத்தப்பட்ட கிளிநொச்சி திருச்சபைக்குச் சொந்த

—6ம் பக்கம் பார்க்க

# பாடசாலை அபிவிருத்திக்கு பெற்றோர் பங்கு அவசியம்

"கல்வி வளர்ச்சியில் பெற்றோர் கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும். பெற்றோர்கள், நலன் விரும்பிகளை உள்ளடக்கிய பாடசாலை அபிவிருத்திச்சபை பாடசாலையின் வளர்ச்சிக்கு நன்கு உழைக்க முடியும். உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய அபிவிருத்திச்சபை பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டு மகத்தானது. தொடர்ந்தும் குறித்த அபிவிருத்திச்சபை நல்ல தொண்டு புரியும் என்பது எமது நம்பிக்கை."

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய அபிவிருத்திச் சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய அதிபர் திரு. வி. அரியநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செயலாளர் திரு. து. இ. இரத்தினவேலு, தனாதிகாரி திரு. அ. பஞ்சாட்சரம் இருவரும் சமர்ப்பித்த அறிக்கைகள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

வித்தியாலய அபிவிருத்தி குறித்துத் திருவாளர்கள் ஐ. சோமசுந்தரம், ந. கணேசலிங்கம், சி. கதிரவேலு உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவு வருமாறு:- தலைவர்: திரு. வி. அரியநாயகம், உப தலைவர்கள்: திரு. க. சிவஞானம், திரு. த. சிவசுப்பிரமணியம், காரியதரிசி: திரு. து. இ. இரத்தினவேலு, உப காரியதரிசி: திருமதி. க. இராசேந்திரம், தனாதிகாரி: திரு. அ. பஞ்சாட்சரம்.


## வரி விளம்பரம்

**ST. JUDE**
Most Grateful Thanks to the Sacred Heart of Jesus and St. Jude for favours granted.

Rani

### தேவை

விற்பனையாளர்/உதவியாளர்கள்: அனுபவமும், திறமையும் மிக்க விற்பனையாளர்கள் தேவை. யாழ். நகருக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ், இல. 234, 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### தேவை

நீண்டகால அனுபவம் உள்ள மரத் தளபாடங்கள் பொலிசிங் செய்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும், டில்கா பேணிச்சர் பலஸ், இல. 234, 236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### ஏல விற்பனை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் காலையிலிருந்து அநேகவித பொருட்கள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்காட்டுச் சந்தைக் கட்டடத்தில் விற்பனையாகும். உங்களிடம் விற்பனைக்கிருக்கும் பொருட்கள் எவையானாலும் அனுப்பி வைக்கலாம். விபரங்களுக்கு: ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.


# சைவசமய பாடப் பரீட்சை

(புங்குடுதீவு)

யாழ். சைவ பரிபாலன சபையினர் நடத்தும் சைவ சமய பாடப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கிறது.

2ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படுமெனப் பரீட்சை காரியதரிசி திரு. வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

# அந்தோனியார் உற்சவம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 5-ம் திகதி (5-7-85) மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 7-ம் திகதி காலை நிகழும் அந்தோனியார் தேர்ப் பவனியுடன் பூர்த்தியடையும். இதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகக் குழு மேற்கொண்டுள்ளது.




✳ யாழ்ப்பாணம், தட்டாதெரு. தயாளன் கமலேஸ்வரி தம்பதிகளின் மகன் ஜனார்த் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி டாக்டர் வேலாயுதம் ரஞ்சி தம்பதிகளின் புதல்வன் நிரோஜன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகின்றார்.

✳ ஆவரங்கால், சுப்பிரமணியம் சரோஜினிதேவி தம்பதிகளின் மகன் தவக்குமரர் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ மானிப்பாய், சுதுமலை வடக்கு கனகலிங்கம் சற்குணராணி தம்பதிகளின் மகள் கார்த்திகா இன்று தனது மூன்வது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ வதிரி, செல்வநாதன் செல்லமலர் தம்பதிகளின் மகள் சுஹன்யா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ சரவெட்டி, சிவசுப்பிரமணியம் சோதிமலர் தம்பதிகளின் பிள்ளைகள் பானுராஜா பானுரேகா ஆகியோர் இன்று தமது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்கள்.

✳ திருநெல்வேலி கிழக்கு, அரசடி வீதி, ஜீவரத்தினம் இந்திராணி தம்பதிகளின் மகள் சுதர்ஜினி இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✳ நாவாந்துறை, காரைநகர் வீதி, செல்லப்பா பரமேஸ்வரி தம்பதிகளின் மகன் குலேந்திரராஜ் (பாபு) இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## வங்கி மேலிடத்திடம் கோரிக்கை:

# தட்டெழுத்துப் பரீட்சையை வடபகுதியில் நடாத்துங்கள்

(புலோலி)

இலங்கை வங்கி ஆங்கில தட்டெழுத்தாளர்களை நியமனஞ் செய்வதற்கு நடாத்திய தட்டெழுத்துப் பரீட்சையை மீண்டும் வடபகுதியில் நடாத்தவேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள் குழு இலங்கைவங்கி ஆளணி முகாமையாளரிடம் கோரியுள்ளது.

வடபகுதியிலிருந்து விண்ணப்பித்து, கொழும்பில் நடாத்தப்பட்ட தட்டச்சுப் பரீட்சையில் தோற்ற முடியாதவர்களுக்காக இத்தட்டச்சுப் பரீட்சை மீண்டும் கொழும்பில் கடந்தமாதம் 26-ஆம்திகதி நடாத்தப்பட்ட போதும் அனுராதபுரத்தில் நடைபெற்ற சம்பவங்களையடுத்து போக்குவரத்து சீர்குலைந்துள்ளமையினால் அப் பரீட்சைக்கும் வயி பகுதியிலிருந்து தோற்றவேண்டியவர்கள் தோற்ற முடியாது போனது கவலைக்குரியதாகும். எனவே வட பகுதியிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பரீட்சார்த்திகளுக்கு உதவுமுகமாக இப்பரீட்சையை வடபகுதியில் நடாத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள் குழு கேட்டிருக்கின்றது.

# சர்வதேச இளைஞர் ஆண்டு; நல்லூரில் பல போட்டிகள்

(இருபாலை)

சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு நல்லூர் வட்டார ஒய்வூதியர் நலன்புரிச் சங்கத்தினர் நல்லூர் வட்டாரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையே கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்குமுகமாக பேச்சுப்போட்டி, நுண்கலைப் போட்டி, சமயப் போட்டி ஆகியனவற்றை நடாத்தவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் பாடசாலை மாணவர்கள் மாணவிகள் தங்கள் பாடசாலை அதிபரினூடாக ஆவணி மாதத்திற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி ஒய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு. ஏ. எம். இராஜேந்திரன் வேண்டியுள்ளார்.

# வீதி சீரமைப்பு

(பரந்தன்)

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் முரசுமோட்டையிலிருந்து வெளிக்கண்டல் சந்தி வரையுள்ள வீதியை இப்பகுதி இளைஞர்களும், பொது மக்களும் ஒன்று சேர்ந்து திருத்தம் செய்து வருகின்றனர்.

நீண்ட காலமாக இவ்வீதி திருத்தம் செய்யப்படாமையால் குன்றும் குழியுமாகக் காட்சியளித்து வந்தது. இதன் காரணமாக வாகனச் சொந்தக்காரரும் பாதசாரிகளும் பெரும் இன்னல்களை அனுபவித்து வந்தனர்.

# பிள்ளையார் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், வெள்ளெருவை பிள்ளையார்தேவஸ்தான மகோற்சவம் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமானது. ஐந்தாம் திகதி பூர்த்திபெறும்.

# 'ட்ருன்ஸ்போமர்' அமைக்க திட்டம்

(சுழிபுரம்)

சுழிபுரம் பகுதியில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் மின்சாரக் கோளாறுகளை நீக்கும் முகமாக "ட்ருன்ஸ்போமர்" ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக சுழிபுரம் அபிவிருத்திச் சபை சுமார் ஏழரை இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதற்குரிய நிலையத்திற்குத் தேவையான நிலத்தை யாராவது அன்பளிப்புச் செய்யக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


### ஏல விற்பனவு

காரைநகர் மாப்பாணவூரி திரு. தி. க. பெரிய தம்பி அவர்களிடம் 01-06-1983 தொடக்கம் 30-05-1984வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 11-07-1985 வியாழக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து ஏன்றுல் விற்கப்படும்.

கே. இராஜகோபால்
ஏலவிற்பனையாளர்
வண்ணார்பண்ணை

## வியாபாரிகளுக்கு ஓர் அறிவித்தல்

தோலகட்டி ஆச்சிரம அதிசிரேஷ்டர்
அதி வணக்கத்துக்குரிய
**J. B. பாக்கியநாதர், C. R.**
இறைவனடி சேர்ந்ததையிட்டு அஞ்சலி செலுத்தும் முகமாக எமது விற்பனைகள் யூன் மாதம் 23 முதல் 28 வரை (இரு நாட்கள் உட்பட) நடைபெறமாட்டாது.

ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
வங்கசாலை வீதி, யாழ்நகர்


# சட்டவிரோத மின் இணைப்பு துண்டிப்பு

(மிருசுவில்)

உசன், மிருசுவில் பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களின் மின் இணைப்பு வயர்கள் இளைஞர் குழு ஒன்றினால் துண்டிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின் இணைப்புக்களால் ஏற்படும் விளைவுகள் பற்றி இவர்களுக்கு முன்னர் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. அந்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தொடர்ந்தும் களவாக மின்சாரம் பெற்றுவந்த பலரினதும் மின் இணைப்புக் கம்பிகள் அறுக்கப்பட்டு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டன.

# உற்சவம் ரத்து

(சாவகச்சேரி)

சரித்திரப் பிரசித்தி பெற்ற சிவன்தலமான சாவகச்சேரி ஸ்ரீ சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலய வருடாந்த மகோற்சவம் இந்த ஆண்டு நடைபெறவில்லை. நாட்டின் நிலைமை சீராக இல்லாமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.


தோலகட்டி ஆச்சிரம அதி சிரேஸ்டர்
அதி வணக்கத்திற்குரிய
**J. B. பாக்கியநாதர், C.R.**
## இறைவனடி சேர்ந்தார்

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் இருந்துகொண்டு வரப்பட்டு யாழ். அருள் ஆச்சிரமத்தில் இன்று 25-6-85 முற்பகல் 10.00 மணிக்கு திவ்விய பூசைப்பலியின் பின் தோலகட்டி ஆச்சிரமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை (26-6-85) காலை 7.30 மணிக்கு திவ்விய பூசைப் பலியின் பின் தோலகட்டியில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:- செபமாலை தாசர் சபை

புங்குடுதீவு
அருள்மிகு அந்தோனியார் ஆலய
## வருடாந்த உற்சவம்

"நானே உலகின் ஒளி" இயேசு

5 - 7 - 85 வெள்ளிக்கிழமை :
கொடியேற்றம் பி. பகல் 3-30
மாலை 4-30 மணி, பூசை - பஜனை

6 - 7 - 85 சனிக்கிழமை :
தியான வழிபாடு, மாலை 4-30 மணி, பூசை

7 - 7 - 85 ஞாயிற்றுக்கிழமை :
காலை 8-00 மணி விசேட பூசை
,, 9-00 மணி அருள்மிகு அந்தோனியார் தேர்ப் பவனி
,, 10-30 மணி பக்தர்களுக்கு கோடியற்புதரின் ஆசி

புனிதரின் அருளாசியால், அன்பினையும், நாட்டில் சமாதானத்தையும் வளர்க்கவும், ஆன்மீக ஒளியைக் காணவும், வேண்டுவார் வேண்டும் வரங்களைப் பெறவும் அனைவரையும் விழாவில் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பக்தன்
செல்வா, கிறிஸ்பியன்

பாடசாலை விழாவில் அறிவுரை

# குடும்பம் என்ற உணர்வுடன் செயற்படல் வேண்டும்

(காரைநகர்)

"ஒரு பாடசாலை வளர்ச்சியடைவதற்கு அது ஒரு குடும்பமாக இயங்க வேண்டும். இது எங்கள் பாடசாலை என்ற உணர்வுடனும் சேவை மனப்பான்மையுடனும், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரும் ஒரே குடும்பமாகச் செயற்படும் போதுதான் அப்பாடசாலை முன்னேற்றமடைகிறது."

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலும், புதிய கட்டடத் திறப்பு விழாவிலும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாக்களில் திரு. தர்மலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில், "யாழ் மாவட்டத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் குன்றிவரும் இக்காலத்தில் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த ஒழுக்கமும் கட்டுப்பாடுமுடையவர்களாக விளங்குகின்றனர். மானிப்பாய் தொகுதியில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இது திகழ்கிறது" என்றார்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறியதாவது: "ஒரு பாடசாலையின் வளர்ச்சி கட்டடங்களில் மாத்திரம் தங்கியிருக்க முடியாது. மாணவர்களின் கல்வி அபிவிருத்தியிலும், ஒழுக்கத்திலும் பாடசாலை வளர்ச்சி மதிப்பிடப்படுகிறது. இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இயன்றளவு நடவடிக்கை எடுப்பேன்" என்றார்.

இவ்விழாக்களை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த யாழ்-கல்வித்திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் உரையாற்றுகையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை எமது பொருளாதார வளம் அழிந்து மனித வளம் ஒன்று தான் எஞ்சியுள்ளது. இதற்கு மூலதனம் கல்வி. இக்கல்வியை எமது பகுதியில் விருத்தி செய்வதற்கு உதவி புரிய அனைவரும் முன்வர வேண்டும். அடிக்கடி கேட்கும் குண்டுச் சத்தங்களால் நகர்ப்புறப் பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டு ஆசிரியர்களும், மாணவர்களும் ஓட்டம் பிடிக்கின்றனர் இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது. சிறு சிறு அசம்பாவிதங்களுக்காகப் பாடசாலைகளை மூடிவிடாது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை செலுத்த வேண்டும்" என்றார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் உரையாற்றுகையில் எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் சிறந்த கல்வி புகட்டப்பட வேண்டுமென்பதற்காகத் தற்போது பாடசாலைகள் வலயங்களாக வகுக்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் ஒரு மாணவன் எட்டாம் ஆண்டு சித்தியடைந்தவுடன் தொழில் பெறக்கூடிய வகையில் தராதரப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன." என்றார்.

திரு. டபிள்யூ. ஈ. அன்னப்பா திரு. க. திருநாவுக்கரசு திரு. எஸ். சிறீகரன், திரு. கே. வல்லிபுரம் திரு. அ. மு. அருணாசலம் உட்படப் பலர் உரையாற்றினர் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எஸ். வி. பரமேஸ்வரன் நன்றி தெரிவித்தார். மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# பனஞ்சாற்றிலிருந்து 'வைன்' தயாரிப்பு; யாழ். பேராசிரியரின் புதிய கண்டுபிடிப்பு

(சுண்டுக்குளி)

திராட்சையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வைனைப் போன்று பனஞ்சாற்றிலிருந்தும், வைன் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாவரவியல் துறைப் பேராசிரியர் திரு கே. தெய்வேந்திரராஜா மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து பனம் வைன் உற்பத்தி பற்றிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பேராசிரியர் திரு தெய்வேந்திரராஜா தனது இக்கண்டு பிடிப்புப் பற்றி இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபைக்கு அறிவித்துள்ளார்

பனஞ்சாற்றிலிருந்து இதுவரையில் 'வைன்' தயாரிக்கப்படவில்லை என்றும், ஆனால் இது ஒரு சிறந்த மூலவளமாகப் பாவிக்கக்கூடியதென்றும் மற்றப் பொருட்களுடன் ஒப்பிடும் போது இது நேரடியாகவே வெல்லத்திரவ நிலையிலிருப்பதாகவும் தங்களுடைய ஆராய்ச்சிகளின்படி மிகச் சுலபமாக ஒரு சிறந்த பனம் வைனைத் தயாரிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

பொதுவாகக் கூறப்படும் செறிவு குறைந்த மதுசாரமெனப்படும் லோ-வைனிலிருந்து பனம் வைன் முற்றிலும் வேறுபட்டதென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளதுடன் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டால் பனம் வைன் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடிய தனித்துவம் வாய்ந்த வைனாக இருக்குமென்றும் சிபார்சு செய்துள்ளார்.

## மின்சாரமின்றி அவஸ்தை

(யாழ்ப்பாணம்)

சரவணை முருகையா வீதிக்கு மின்சாரமின்மையால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக சரவணை கிராம முன்னேற்றச் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

சரவணைக் கிராமம் ஒதுக்கப்படக் கூடாது என்று மேற்படிச் சங்கத் தலைவர் திரு. இ. நகுலேசபிள்ளை தான் விடுத்த கோரிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அதிகாரிகள் இது விடயத்தில் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பலாலி மக்கள் சுகாதார குழுவின் முதலுதவி வகுப்பு

(பலாலி)

பலாலி மக்கள் சுகாதாரக் குழுவின் முயற்சியினால் பலாலியில் முதலுதவி வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரன் இவ்வகுப்பை ஆரம்பித்து வைத்தார்

மேற்படி மக்கள் சுகாதாரக் குழுவின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. மி. ஆர்கபிற்றர்ஸ் உபதலைவர் திரு அ மரியகொறற்றி, செயலாளர் திரு. சி. சுப்பிரமணியம் (பலாலி உபதபாலதிபர்) உப-செயலாளர் செல்வி. சுரேமி சந்தியாகோ, பொருளாளர் செல்வி சந்தனுமனுவேற்பிள்ளை செயற் குழு உறுப்பினர்களாகப் பத்துப் பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# 'நாட்டின் பூரண விடுதலையில் தொழிலாளரின் பங்களிப்பு'

(யாழ்ப்பாணம்)

"ஒவ்வொரு நாட்டின் பூரண விடுதலையும் அந்தந்த நாட்டில் இருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் செயற்பாடுகளின் மூலமே வெற்றி பெறமுடிகின்றது. உலக சரித்திரமே இதற்குச் சான்று பகர்கின்றது எமது தாய்த் திருநாடும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது என்று லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் யாழ் மாவட்ட செயலாளரும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட-பிரதேச அமைப்பாளருமான திரு. எஸ். விஜயானந்தன் கூறினார்.

திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை தலைமையில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இளைப்பாற்று மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை கூட்டுத்தாபன ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

'வட-பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு அமைத்து செயற்படுவதற்கு தொழிலாளி வர்க்க ஐக்கியம் பலப்படுத்துவதற்கான முன் முயற்சியாக அமைந்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளின் தீர்விற்காகவும் அரச பயங்கரவாதத்திற்கெதிராகவும் கூட்டுக்குழு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது" என்றும் அவர் சொன்னார்.

திரு பொன். குமாரசாமி எம் சூசைப்பிள்ளை உட்பட மற்றும் பலரும் பேசினர். புது வருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

## ரயில்வேப்பகுதி மேற்கொண்ட மாற்று ஏற்பாடு

(மிருசுவில்)

வவுனியாவுக்கு அப்பால் தமிழ்ப்பகுதிகளில் ரயில்களில் பணிபுரிய புகையிரதப்பகுதி சிங்கள ஊழியர்கள் தயக்கம் காட்டியதை அடுத்து புகையிரதப்பகுதி புதிய மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்துள்ளது.

இந்த ஏற்பாட்டின்படி கொழும்புகோட்டையிலிருந்து யாழ்தேவி புகையிரதத்தில் கடமை புரியும் சிங்கள ஊழியர்கள் வவுனியாவுடன் தமது கடமையை முடித்துக் கொள்வர். வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையே புகையிரதத்தில தமிழ்ச்சாரதி, பாதுகாப்பாளர்கள் கடமை புரிவர்.

அண்மையில் அனுராதபுரத்தில் நடந்த அசம்பாவிதங்களை அடுத்து அங்கிருந்து வெளியேறிய தமிழ்ச்சாரதி பாதுகாவலர்கள் இந்த ஏற்பாட்டின்படி வவுனியாவிலிருந்து கடமை புரிவர்.

# வடபகுதிப் பாடசாலைகள் தனிக் கௌரவம் பெற்றவை

(மிருசுவில்)

"முன்னர் பாடசாலைக் கட்டட வேலைகளை அப்பாடசாலையின் அபிவிருத்திச்சங்கத்திடமே ஒப்படைப்பது வழக்கம். ஆனால் பின்னர் கல்வி அமைச்சு பாடசாலைக்கட்டட வேலைகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கக் கூடாதென்றும் அவற்றைக் கட்டட ஒப்பந்தகாரர்களிடம் கையளிக்க வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தது. இவ்வுத்தரவு பற்றி கல்வி அமைச்சு உயர் அதிகாரிகளிடம் நாம் வினவியபோது வடக்கில் பாடசாலை அபிவிருத்திச்சங்கங்கள் மிகத் திறமையாக இயங்குகின்றனவென்றும், ஒப்படைக்கப்பட்ட கட்டட ஒப்பந்த வேலைகளை நல்லமுறையில் நிறைவேற்றுவதாகவும் ஆனால் நாட்டின் ஏனைய பகுதிகளைப் பொறுத்தமட்டில் இதற்கு எதிர் மாறான நிலை காணப்படுவதினாலேயே இம்மாற்றம் கொண்டுவர வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது"

இவ்வாறு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறை மண்டபம், பாடசாலைக் காரியாலயம் ஆகியவற்றைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். கல்வி அதிகாரி திரு. ச. சோமசுந்தரம் தெரிவித்தார்.

சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. தங்கராசா தனது உரையில் "சாவகச்சேரித் தொகுதியிலேயே இப்பாடசாலை இன்று மிக வேகமான வளர்ச்சிகண்டு வருகின்றது. இங்கு இன்று நாம் திறந்து வைத்த கட்டடம் 47 நாட்களில் தரமான முறையில் கட்டி முடிக்கப்பட்டதை அறிந்து வியப்படைந்தேன்" என்றார்.

பாடசாலை அதிபர். திரு. க. பேரம்பலம், கனிஷ்ட பிரிவு அதிபர். திரு அ. திருநாவுக்கரசு, இசைப்புலவர் சி செல்லத்துரை. திரு. த. வல்லிபுரம் ஆகியோரும் உரையாற்றினர்.

# கோப்பாயில் சைவசமய ஒன்றியம் அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வட்டாரத்திலுள்ள சைவ சமய ஸ்தாபனங்கள் கோயில்கள் பாடசாலைகளின் இந்து மாமன்றங்கள் ஆகியவற்றின் "ஒன்று கூடல் வைபவம்" ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் நடைபெற்றது.

இவ் வைபவத்திற்குக் கோட்ட அறங்காவலர் க. றமேஷ் குமார் தலைமை வகித்தார். சைவ சமயத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. கோப்பாய் வட்டாரத்திலுள்ள சைவ ஸ்தாபனங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஓர் ஒன்றியத்தையும் உருவாக்க வேண்டும் என ஆலோசனை செய்யப்பட்டது. இவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் எமது சமயத்தை எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளைச் சமுமாக தீர்க்க முடியும் எனவும் ஆலோசனை கூறப்பட்டது இந்த ஒன்றியம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளை ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம் மேற்கொண்டு வருகிறது.

## கி. சேவகருக்கு பிரிவுபசாரம்

(பலாலி)

மயிலிட்டி தெற்குக் கிராம சேவையாளராக ஏழு வருடங்கள் சேவையாற்றி இப்போது பலாலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. எஸ். உலகநாதனுக்கு மயிலிட்டி தெற்குப் பகுதி மக்கள் பிரிவுபசார வைபவம் ஒன்றினை சிறப்பான விதத்தில் நடத்த ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## கோரிக்கை

(கல்வியங்காடு)

கொக்குவில் உப-அலுவலகம் கொக்குவில் மயானத்தில் மடம் ஒன்று அமைப்பதற்கு எழுபத்தையாயிரம் ரூபாவும் கொண்டாவில் கட்டையாலடி மயான எல்லைச்சுவர் கட்டுவதற்கு இருபத்தையாயிரம் ரூபாவும் கொக்குவில் ஆடிய பாதம் சந்தைக்கு மேலும் ஒரு இலட்சம் ரூபாவும் கோரி யாழ் மாவட்ட செயலாளரிடம் விண்ணப்பித்திருக்கிறது.

## ஆலய உற்சவம்

(மிருசுவில்)

இளாலி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் கொண்டாடப்பட்டது. திருநாள் பாடல் பூசையை மிருசுவில் பங்குத் தந்தை அருள் திரு. எம். எம். அமிர்தகுமார் அடிகளார் ஒப்புக் கொடுத்தார்.

# புதிய கல்வித் திட்டத்தினால் விளையும் நன்மைகள் என்ன?

## கல்விப் பணிப்பாளர் விளக்கம்

(சாவகச்சேரி)

அடுத்த கல்வி ஆண்டில் நாட்டிலுள்ள சகல கல்விப் பிராந்தியங்களிலும் ஏற்படுத்தப்படவுள்ள கல்வி நிர்வாக மாற்றங்களுக்காக இப்பொழுது ஒவ்வொரு கல்வி வட்டாரங்களிலும், கல்வி வலயங்கள் பிரிக்கப்படும் வேலைகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் புதிய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராஜா தலைமையில், கல்வி வலயங்கள் பிரித்தல் பற்றியும், புதிய கல்வித்திட்டம் பற்றியும் விளக்கப்பட்டது. வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை, கலவித் திணைக்கள கல்வி அதிகாரிகள் திரு. கு. சோமசுந்தரம், திரு. வி. கந்தசாமி ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தின் 63 பாடசாலைகளிலிருந்தும் அதிபர்கள், அபிவிருத்திச் சபை செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கல்விப் பணிப்பாளர் புதிய கல்வித்திட்டம் பற்றி விளக்குகையில் "பாடசாலைகளில் கூடிய கவனம் செலுத்துவதற்கும், மூலவளங்களைச் சரிவரப் பயன்படுத்துவதற்கும், புதிய கல்வித்திட்டம் பேருதவியாக இருக்கும்" என்றார்.

மேலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேக்கல்லூரி இரண்டினதும் ஆரம்பப் பிரிவுகள் தனித்து இயங்குவது பற்றிய சாதக- பாதகங்கள் பற்றியும் ஆராயப்பட்டன.

1986ம் புதிய கல்வி ஆண்டிலிருந்து தொடக்க நிலைப் பாடசாலைகளில் பெரும்பாலான பாடசாலைகளில் 7 ம் ஆண்டு வகுப்புகள் உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது.

உதய சிந்தனை

உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஒளித்து வைக்காதீர்கள் அவற்றை வெளியே சொல்வது கேவலமானால், அதனை எண்ணுவது இன்னும் கேவலமாகும். — காந்தி.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336


## இதய ஒலி

25-6-1985 செவ்வாய்க்கிழமை (குரோதன ஆனி 11)

# பாரதத்துக்கு மற்றொரு சவால்

அத்திலாந்திக் கடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் முன்னூற்று இருபத்தைந்து பிரயாணிகள் கொல்லப்பட்ட செய்தி, மனித உயிர்களை நேசிக்கும் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த கவலையடையச் செய்திருக்கும்.

இந்தியாவுக்குச் சொந்தமான ஜம்போ ஜெட் விமானம் கனடாவிலிருந்து புறப்பட்டு, லண்டன் வழியாக பம்பாய்க்குச் செல்லவிருந்தது.

அயர்லாந்துக்கு அண்மையில் செல்லுகையில் திடீரென விமானம் வெடித்துப் பிளந்ததாகவும், அத்லாந்திக் கடலில் விழ்ந்து நொருங்கியதாகவும் பின்னர் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானத்தில் பயணம் செய்த எவருமே தப்பியிருக்க முடியாதென்ற அறிவிப்பும், நூற்றுஐம்பது வரையிலான சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதான தகவலும் உலகை மகிழ்விக்கும் செய்தியாக இருக்க முடியாது.

குண்டு வெடிப்பால் இவ்விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம், தற்போது இருவர் உரிமை கோரியுள்ளதால் ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றது.

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை அலுவலகத்துக்கு நேரில் சென்ற ஒருவரும், 'நியூயோர்க் போஸ்ற்' பத்திரிகை அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இன்னொருவரும் இத்தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளனர்.

இறந்தவர்கள் எந்த நாட்டவர்; எந்த மதத்தவர்; என்ன இனத்தவர் என்ற ஆராய்வுகளுக்கு உரிய நேரமல்ல இது.

மனித உயிர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளன என்று மட்டுமே இதனை நாம் அணுகுகின்றோம்.

விமானக் கடத்தல்களும், பயணிகள் பணயக் கைதிகளாக்கப்படுவதும், விமானங்கள் குண்டுவைத்துத் தகர்க்கப்படுவதும் இன்றைய காலத்தில் வியப்புக்குரிய சமாச்சாரம் அல்ல.

ஆகக் குறைந்தது வாரத்தில் ஒரு தடவையாவது விமானக் கடத்தல் இடம்பெறுவது சர்வ சாதாரணமாகிவிட்டது!

ஆனால், அதற்கான காரணத்தை அறிவித்து, நிபந்தனையைப் பகிரங்கப்படுத்தி, கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னரே தமது 'தீர்ப்பை' விமானக் கடத்தல்காரர்கள் வழங்குவது வழக்கம்.

எந்த விமானக் கடத்தலின்போதும் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் மனிதாபிமான அடிப்படையில் முதலில் இறக்கப்படுவது நடைமுறை.

கடந்த வாரம் பெய்ருட்டில் இடம்பெற்ற விமானக் கடத்தலின்போது சகல பயணிகளும் இறக்கப்பட்டு, விமானச் சிப்பந்திகளும் வெளியேற்றப்பட்ட பின்னரே விமானம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

ஆனால் இந்திய ஜம்போ ஜெட்டுக்கு நேற்று முன்தினம் நடைபெற்றது முற்றிலும் வழக்கத்துக்கு மாறானதாகும்.

எழுபது சிறுவர், சிறுமியர்களும், பத்துக்கும் அதிகமான கைக்குழந்தைகளும் விமானத்தில் பயணம் செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஒன்றுமறியாத இந்தப் பிஞ்சுகள், ஈன இரக்கமற்ற கொடியவர்களின் நாசகாரச் செயலுக்குப் பலியாக்கப்பட்டுள்ளதை எவராலுமே இலகுவில் மறந்துவிட முடியாது.

எத்தனை பெண்கள், வயோதிபர்கள் இந்த விமானத்தில் பயணம் செய்திருப்பார்கள்.

விமானத்தில் ஏறும்போது தமக்கு இவ்வாறான ஒருமுடிவு சீக்கிரம் ஏற்படுமென இவர்களில் எவராவது எண்ணிப் பார்த்திருப்பார்களா?

எத்தனை எத்தனையோ அவசர காரியங்களுக்காக, உற்றார், பெற்றார், உறவினர், நண்பர்களைப் பார்ப்பதற்கென்று விமானத்தில் ஏறிய முன்னூற்று இருபத்தைந்து மனித உயிர்கள் பயங்கரவாதத்திற்குப் பலியாக்கப்பட்டுவிட்டன.

அணிசேரா நாடுகளின் தலைமை நாடாக விளங்கும் இந்தியாவின் விமான சேவைக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஒரு சவால் இது என்றே கருதவேண்டியுள்ளது.

பாரதத்தில் அடிக்கடி இடம்பெற்று வந்த வீதி விபத்துக்களைப் போல, அதன் விமான சேவையிலும் இவ்வாறான தாக்குதல்களை நடத்தி பாரிய மரணங்களை ஏற்படுத்தும் சர்வதேச பயங்கரவாதிகளின் முதலாவது திட்டமிட்ட செயல் இது என்று எண்ணவும் இடமுண்டு.

இதனை முளையிலே கிள்ள வேண்டும்; இல்லாவிடின் இந்திய விமான சேவையையே இழுத்துமூட வேண்டிய நிலை கூட ஏற்பட்டுவிடலாம்.

### நயினாதீவு உற்சவ ஏற்பாடுகள் விபரம்

# கல்யாண மண்டபம், இறை பயணிகள் இல்லம், புனித கற்களுக்கு செல்லும் வீதி திறப்பு விழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் கடந்த 18ம் திகதி தொடக்கம் வருடாந்த திருவிழா ஆரம்பமாகி நடந்து வருகிறது. இத்திருவிழாக்கள் ஜூலை 2ம் திகதி இடம் பெறவுள்ள தெப்போற்சவத்துடன் நிறைவு பெறும். இம்மாதம் 27ல் பஞ்சத் திருவிழாவும் 30ல் சப்பறத் திருவிழாவும் ஜூலை 1ல் தேர்த் திருவிழாவும் 2ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், நடைபெறும். வழமை போல் அடியார்களுக்கான குடிநீர், சுகாதாரம், பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

11ந் திருவிழா நாளான இம்மாதம் 28ம் திகதி கோவிலின் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கல்யாண மண்டபம், இறைபயணிகள் இல்லம் ஆகியவற்றையும் கோவிலின் கிழக்குப்புற வாசலில் ஆரம்பித்து வடபுறமாகப் புனிதக் கற்களுக்கும், ஐயனார் கோவில் முடியிறக்கும் இடம் வரை, வள்ளுவர் மடம், நாக சாந்தி மடம் ஆகியவற்றுக்குச் செல்லும் "ஆ. குணநாயகம் வீதி" திறப்பு விழவும் முற்பகல் 9-00 மணியளவில் இடம்பெற உள்ளன.

கல்யாண மண்டபமும், இறைபயணிகள் இல்லமும் பல அன்பர்களின் நன்கொடையினால் எழுப்பப்பெற்று பூர்த்தி அடைந்துள்ளது. கோவிலுக்கு வரும் அடியார்கள் நாளொன்றிற்கு ரூபா பத்துமாத்திரம் செலுத்தி அறைகளை வாடகைக்குப் பெற்றுத் தங்கிச் செல்ல முடியும். இந்த இல்லத்துடன் இணைந்ததாக குசினி, கிணறு, மலகூடம் ஆகியவைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டடம் யாழ். செயலகப் பொதுஜனத் தொடர்பு அலுவலர் திரு தம்பையா குலசேகரம் அவர்களால் 28ம் திகதி காலை 9-00 மணியளவில் திறந்து வைக்கப்படும்.

முன்னாள் வேலணை உதவி அரசாங்க அதிபர் ஆறுமுகம் குணநாயகம் அவர்களது நினைவாக கோவிலின் கிழக்கு வாசலில் இருந்து வடபுறமாக பாம்பு சுற்றிக்கல், கருடன்கல், ஐயனார் கோவில் முடியிறக்கும் இடம், வள்ளுவர்மடம், நாக சாந்தி மடம் ஆகியவற்றுக்கான இப்பாதை அமைக்கப்பட்டுள்ளது இவ்வீதி தற்போதைய வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி. மைதிலி சோமசுந்தரம் அவர்களால். 28ம் திகதி காலை திறந்து வைக்கப்படவுள்ளது

### வேலணை கதிர்காமநாதனை

# லண்டன் உயிரியல் நிறுவனம் தகுதி கண்டு கௌரவித்தது

லண்டன் உயிரியல் நிறுவனம் வேலணை என். கதிர்காமநாதனின் 'தீவகத்தின் மண் வளத்திலுள்ள நுண் ஊட்டக் குறைபாடுகள்' ஆய்வினைத் தகுதிகண்டு அவரை அதன் உறுப்பினராகத் தெரிவு செய்துள்ளது

திரு. கதிர்காமநாதன் இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாக விஞ்ஞானப் பட்டதாரி அத்துடன் பட்டப் பொருளாதாரம், கணக்கியல், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்று பிரித்தானிய உற்பத்தி நிர்ணய சபை, உயர் முகாமைத்துவ நிறுவனம் ஆகியவற்றின் உறுப்பினராகவுமுள்ளார்.

தற்பொழுது உணவு, போஷாக்குத் திட்டமிடல் துறையில் 'டாக்டர்' பட்டத்திற்கான கல்வியை மேற்கொண்டுள்ள அதேவேளை, அமெரிக்க சவுத்வெஸ்ட் பல்கலைக் கழகத்தின் கல்விக் குழுவில் இலங்கைக்கான பிரதிநிதியாகவும் பதவி வகிக்கிறார்.

அத்துடன் இவர் ஒரு அகில இலங்கை சமாதான நீதவானாகவும் பதவி வகிக்கின்றார்.

## நிர்வாகிகள்

(கண்டுக்குளி)

வடமராட்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சமாஜத்தின் புதிய தலைவராக அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. த சிவலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

சமாஜச் செயலாளராக இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். திரு. வ. சிவராசா உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பின்வருவோர் சமாஜ இயக்குநர்களாகத் தெரியப்பட்டுள்ளனர்: திரு. சு நடேசு, திரு. தி, அமிர்தநாதன், திரு. செ. முருகேசு, திரு. பொ. சுந்தரம், திரு. பாலசுப்பிரமணியம்.

## விநாயகர் உற்சவம்

(புலோலி)

சரவெட்டி கிழக்கு கிமவி தோட்டம் விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 25ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 19ம் திகதி இரதோற்சவமும் 20ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறுமெனவும், மகோற்சவகாலத் திருவிழாக்களில் பகல் திருவிழாக்கள் காலை 10 மணிக்கும் இரவுத் திருவிழாக்கள் இரவு 7 மணிக்கும் நடைபெறுமெனவும் ஆலய அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது

## பாராட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 9ம 10ம வட்டார பஞ்சாயச் சபையினருக்கு பொது மக்கள் சார்பில் பாராட்டுபசாரம் ஒன்றளிக்கப்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் 175 வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியமைக்காகவே இப்பாராட்டு வைபவம் நடைபெற்றது.

பிரஸ்தாபச் சபையின் தலைவர் திரு கு. அ. குழந்தைவேல் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியமணி சி. க. நாகலிங்கம் டாக்டர் சி. கணேஸ் ஓய்வு பெற்ற அதிபர் திரு. ச சொக்கலிங்கம் திரு. சதாசிவம் சேவியர் ஆகியோருட்பட்ப் பலர் பாராட்டுரை வழங்கினர்.

## சுற்றுடல் சுகாதார தினம்

(பரந்தன்)

கல்வித் திணைக்களமும், கச்சேரியும் இணைந்து பளை மகா வித்தியாலயத்திலும், கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் சுற்றுடல் சுகாதார தினத்தைக் கொண்டாடின.

பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ஜனாப் மன்சூரும், கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் பதில் அரச அதிபர் திரு. சண்முகராசாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். சுற்றுடல் தின சுவரொட்டிக் கண்காட்சி ஒன்றும் புனித திரேசா மகளிர் பாடசாலையில் இடம் பெற்றது.

## உப-மின்நிலையம்

(கல்வியங்காடு)

நல்லூர் உப - அலுவலகத்தினால் கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவலடியில் உப-மின்நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதன் நிர்மாண வேலைகள் நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## கட்டட வேலை துரிதம்

(செம்பியன்பற்று)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை செம்பியன்பற்று உப அலுவலக எல்லைக்குட்பட்ட மருதங்கேணி சந்தைக்கெனப் புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இதற்கென ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் செம்பியன்பற்று உப அலுவலக அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சி. வ. கணேசு தெரிவித்தார்.

## தீவுப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை

(புங்குடுதீவு)

"குடிதண்ணீர்க் கஷ்டத்தால் அவதியுறும் புங்குடுதீவு மக்களுக்குக் கடந்த ஆண்டுகளைப் போன்று இம்முறையும் சமூக சேவைப் பகுதியினர் இலவசமாகக் குடிதண்ணீர் வழங்க முன்வர வேண்டும் இதற்கு ஆவன செய்யுங்கள் என்று புங்குடுதீவில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்கள் யாவும் கூட்டாக யாழ்-அரசாங்க அதிபரைக் கோரியுள்ளன.

இக்கோரிக்கை தொடர்பாக யாழ்-மாவட்ட அபிவிருத்திச் சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தர் திரு. பொன். வைரமுத்து யாழ். அரச அதிபரைச் சந்தித்துப் பேசினார். வெகுவிரைவில் புங்குடுதீவு மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க ஆவன செய்வதாக அரசாங்க அதிபர் உறுதியளித்துள்ளதாகத் திரு. வைரமுத்து தெரிவித்தார்.

## மாவை முருகா

மாவையில் உறையும் மயிலேறும் முருகா
பாவைகள் வள்ளி தெய்வானை துணைவா
தேவைகள் எல்லாம் தீர்த்திடும் இறைவா
கோயில் கொடியேறும், நாளிலே குமரா
மகிழ்வே கொள்கிறோம் மனதினில் முருகா.

★ சிவஞானம் ஜெயசங்கர்

(இன்று 3-ம் நாள் உற்சவம்)

★ தரை, கடல் யுத்தப் பயிற்சி பெற்ற வீரர் மேலும் குவிப்பு

# லெபனுன் கரைக்குச் சமீபமாக உஷார் நிலையில் அமெரிக்கக் கடற்படையினர்

(வாஷிங்டன்)

லெபனுனுக்கு அப்பால் உள்ள அமெரிக்கக் கடற்படையுடன் கடல் யுத்தத்திலும், தரை யுத்தத்திலும் பயிற்சிபெற்ற ஆயிரத்து எண்ணூறு கடற்படை வீரர்கள் சேர்ந்துள்ளதாக வாஷிங்டனில் பாதுகாப்புத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 'நிமிற்ஸ்' என்ற அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலுக்கு இவ் விசேட படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த பதினுன்காம் திகதியன்று கடத்தப்பட்ட ரி. டபிள்யு. ஏ. விமானத்திலிருந்த நாற்பது அமெரிக்கப் பணயக் கைதிகள் பெய்றூட்டிலுள்ள ஓர் மறைவிடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தி ஊர்ஜிதமானதையடுத்து அமெரிக்க ஆருவது கடற்படையைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் லெபனுனையடுத்துள்ள கடற்பகுதியில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

எந்நேரத்திலும் இவ் விசேடக் கடற்படையினர் கடலில் இருந்து தரைக்குச் சென்று தாங்கிகளின் உதவியுடனும் ஹெலிகொப்டர்கள் மூலமும் தாக்குதல்களை நடத்தும் நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. லெபனுன் கரையிலிருந்து நாலுகரை மைல் தொலைவில் இந்த அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கத்தான் ஓர் நல்லெண்ண நடவடிக்கையாக முப்பத்தொரு ஷியாட் கைதிகளை விடுவிப்பதாக இஸ்ரேல் திடீர் அறிவிப்பு ஒன்றினை விடுத்துள்ளது.

எனினும் இவர்களின் விடுதலைக்கும் பெய்றூட்டில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள நாற்பது அமெரிக்கர்களின் நிலைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென இஸ்ரேல் அறிவித்துள்ளது இதனை அமெரிக்காவும் ஆமோதித்துள்ளது.

பிரஸ்தாப முப்பத்தொரு கைதிகளின் விடுதலைபற்றிய முடிவை இஸ்ரேலியப் பாதுகாப்பு மந்திரி மந்திரி சபையில் தெரிவித்தார்

இதற்கிடையில் கடத்தல்காரர்கள்மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் எண்ணமில்லை என்ற ரீதியில் அமெரிக்க ஜனாதிபதி திரு றேகன் ட் நிருபர்கள் மாநாடு ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ளார். இதே வகையில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷும், இஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு பெரஸும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். கடத்தல்காரர்களின் நிபந்தனைக்கு இணையவரும் அமெரிக்கா சர்வதேச பயங்கரவாதத்துக்கு இணங்கியதான பாதிப்பைப் பெறுவதாகி விடும் என இஸ்ரேல் கூறியுள்ளது

இஸ்ரேலில் சிறைவைக்கப்பட்டுள்ள எழுநூறு லெபனுன் கைதிகளைத் தம்மிடம் ஒப்படைத்தால் மாத்திரமே பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர் நாற்பது பேரும் விடுதலை செய்யப்படுவர் என்று கடத்தல்காரர்கள் தரப்பில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கமும் இது விடயத்தில் தலையிட்டுள்ளது.

ஆயன், கடத்தல்காரர் விடயத்தில் எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைதான் என்ன என்பது குறித்து சர்வதேச மக்களும் அறிந்து கொள்ள ஆவல் கொண்டுள்ளனர்.

## வெடி குண்டு

(குஜராத்)

குஜராத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இருவர் கொல்லப்பட்டனர். கட்டடம் ஒன்றில் வெடிகுண்டு தயாரிப்பில் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆச் சம்பவம் நிகழ்ந்ததாம்.

## விசாரணைக்கு உத்தரவு

(காத்மண்டு)

நேபாளத்தில் கடந்த வாரம் நிகழ்ந்த பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து குழுவின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## இவ்வருட இறுதிக்குள்ளாக பஞ்சாப் தேர்தல் நிகழும்!

(அமிர்தசரஸ்)

அகாலிதள் தலைவர்கள் எவ்வித முன் நிபந்தனையுமின்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவார் என்று இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. பி வாஜ்ய் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பஞ்சாபில் எதிர்வரும் அக்டோபர் மாதத்துடன் தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முடிவுறுவதும் அங்கு பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடாத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

## தென்னுபிரிக்காவில் மூண்ட கலகம்: கறுப்பர் கருகிமடிவு

(ஜொஹனன்பேக்)

தென்னுபிரிக்காவில் மீண்டும் இனரீதியான வன்முறைகள் தலையெடுத்துள்ளனவாக அறிவிக்கப்படுகிறது.

புதிய கலவரத்தில் இவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பேச்சாளர் ஒருவர் இது குறித்துத் தகவல் தருகையில் வீடுகள் மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதில் பல வீடுகள் தீக்கிரையானதாகத் தெரிவித்தார்.

கறுப்பு இனத்தவர் ஒருவர் தீயில் கருகி மரணமானார் என்றும் அவர் தெரிவித்தார்.

நெருக்கமான நேசத்தை குறிக்கோளாகக் கொண்டு

## அமெரிக்கத் துணை ஜனாதிபதி புஷ்ஷின் ஐரோப்பிய நாடுகள் விஜயம் ஆரம்பம்

(ரோம்)

அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு ஜோர்ஜ் புஷ் ஐரோப்பிய நாடுகளுக்கான தனது பத்து நாள் விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

தன் விஜயத்தின் முதற்கட்டமாக அவர் இத்தாலி வந்துள்ளார். விமான நிலையத்தில் அவரை இத்தாலிப் பாதுகாப்பு அமைச்சர் வரவேற்ருர்.

திரு. புஷ் இத்தாலியப் பிரதம மந்திரியையும் சந்திக்கவுள்ளார். இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விடயங்கள் இச்சந்திப்பின் போது விரிவாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளுடன் நேசமிக்கத் தொடர்புகளை வலுவாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஜனாதிபதி திரு. றேகனின் விருப்பத்தின் ஓர் அம்சமே துணை ஜனாதிபதியின் இவ்விஜயம் என்றும் வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு.புஷ் பிரேஸில், பிரிட்டன் முதலான நாடுகளுக்கும் செல்லவுள்ளார்.

## பாரதத்தில் ஈரானிய செயலர்

(புதுடில்லி)

ஈரானிய வெளிநாட்டமைச்சின் செயலாளர் தற்போது பாரதம் வந்துள்ளார். பாரத வெளிநாட்டமைச்சின் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## பிலிப்பைன்ஸை கலக்கிய பயங்கர சூருவளி சீனுவை நோக்கி நகர்வதாக அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் பயங்கர வேகத்தில் வீசி பெரும் அனர்த்தங்களை விளைவித்த சூருவளி இப்போது தென் சீனுவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இச் சூருவளியினுல் பெரும் வெள்ளமும் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

சூருவளியினுல் லூஸ்வான் தீவே மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன.

பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவில் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மணித்தியாலத்திற்கு நூற்று ஒன்பது மைல் வேகத்தில் சூருவளி வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆலோசனை

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் சுமுகத் தீர்வு காண்பதற்கு சோவியத் துருப்புகளை அங்கிருந்து விலக்கி இஸ்லாமியப் படைகளை நிறுத்த வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவிப்பு

அணுகுண்டு தயாரிக்கும் எண்ணம் தனது நாட்டிற்கு இல்லை என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாவுல் ஹக் தெரிவித்தார்.

## இலங்கை இனப்பிரச்சினை: 'சுமுகமான நிலை மகிழ்ச்சி அளிக்கிறது' - பாப்பரசர்

(ரோம்)

இலங்கை இனப்பிரச்சினையில் தீர்வு காண்பதற்கான நல்ல சூழ்நிலை உருவாகி வருவது குறித்துத் தான் மகிழ்ச்சியடைவதாக பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

தன்னை நேரில் சந்தித்து ஆசிபெற்ற இலங்கையின் பிரதி வெளிநாட்டமைச்சர் திரு. டிரோன் பெர்னுண்டோவிடம் இதனை அவர் கூறினுர்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையைத்தான் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

★ எடையில் உலகசாதனை ★

## அமெரிக்கர் மெக் கிரேரி

(வாஷிங்டன்)

உலகிலேயே எடையில் கூடிய ஒருவர் பற்றிய தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன அமெரிக்காவைச் சேர்ந்த பெனி மெக் கிரேரி என்பவரே பிரஸ்தாப சாதனையாளர் ஆவார். அவரது எடை என்ன தெரியுமா? அறிந்து கொண்டதும் நீங்கள் மூர்ச்சித்து விழுந்தாலும் கூட வியப்பில்லை அவரது எடை எண்ணூற்றுப் பதினுன்கு இருத்தலாகும். நீளக் காற்சட்டையும் ஷேர்ட்டும் அணிவதில்தான் அவருக்கு அலாதிப்பிரியம் அவரது உயரம் ஆறு அடி. அவர் அறை ஒன்றுக்குள் நுழைகையில் அவ்வறையே குறுகி விட்டாற் போன்றே தோற்றும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 'கின்னஸ்' புத்தகத்தில் பெயர்பெற்று உலக சாதனையாளராகத் திகழ்கிருர் மெக் கிரேரி.

இந்திய விமானவிபத்து

## இரு தீவிரவாதக் குழுக்கள் உரிமை கோருகின்றன!

(புதுடில்லி)

இந்திய விமான விபத்தில் உயிர் பிழைத்திருக்கக் கூடியவர்களைத் தேடும் பணியைத் தொடருவதற்காக ரோயல் விமானப் படையின் நான்கு ஹெலிகொப்டர்கள் அயர்லாந்தின் கார்க் விமான நிலையத்திலிருந்து நேற்றுக் காலை புறப்பட்டுச் சென்றன.

விமானத்தின் பிளக் றெக்கோடர் கருவியை அத்லாண்டிக் ஆழ்கடலில் தேடுவதற்குப் பிரிட்டிஷ் மினிசப்மறின் கப்பல் ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது. அக்கருவி வானத்தில் குண்டுவெடிப்பினுல் விமானம் நொறுங்கியதா என்பதை உறுதிப்படுத்த உதவும். சுமார் நூற்று நாற்பது சடலங்கள் கடலிலிருந்து மீட்கப்பட்டு பதினெட்டுச் சடலங்கள் கார்க் விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

சடலங்களை அடையாளம் கண்டுபிடிப்பதற்காக இறந்தவர்களின் உறவினர்களை லண்டனுக்கு விமானத்தில் அனுப்ப எயர் இந்தியா ஏற்பாடு செய்துள்ளது.

எயர் இந்தியா விபத்தையடுத்து கனடா அரசு எல்லா சர்வதேச விமானப் பயணங்களுக்கும் பந்தோபஸ்து ஏற்பாடுகளை அதிகரித்திருக்கிறது.

எயர் இந்தியா ஜம்போ ஜெட் கனிஷ்கா விமானம் 329 பயணிகளுடன் அயர்லாந்து கரைக்கருகே அத்லாண்டிக் கடலில் நொறுங்கி விழுந்ததற்குத் தாமே பொறுப்பு என இரண்டு தீவிரவாதக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

தீவிரவாத அமைப்பொன்றின் உறுப்பினர் எனக் கூறிக்கொண்ட இளைஞர் ஒருவர் 'நியுயோர்க் டைம்ஸ்' அலுவலகத்துக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விமானத்தில் குண்டு வைத்ததற்குத் தாமே பொறுப்பு எனக் கூறினுர். 'நியுயோர்க் போஸ்ட்'டுக்கு ஒருவர் பெயர் சொல்லாமல் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபத்துக்குத் தாம் பொறுப்பு என்ருர்.

இந்திய உச்சரிப்புடன் பேசிய அவர் தாம் இன்னுரு தீவிர அமைப்பைச் சேர்ந்தவர் எனக் கூறினுர்.

சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலர் டாக்டர் சித்துவின் தலைமையில் நிபுணர் குழு ஒன்று நேரில் விசாரிப்பதற்காக அயர்லாந்து சென்றுள்ளது

சஞ்சய் நினைவு நாள்

## அண்ணன்- அண்ணி மனைவி அஞ்சலி

(புதுடில்லி)

சஞ்சய் காந்தியின் ஐந்தாவது வருட நினைவுகளையொட்டி சாந்தி வனத்தில் அவரது சமாதிக்குப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தியும் அவரது மனைவி திருமதி ஸோனியா காந்தியும் சஞ்சயின் மனைவி மேனகாவும் மலர் வளையம் சாத்தி தம் அஞ்சலியைச் செலுத்தினர்.

ஈழமுரசு

'சுய்ஸ்' விடுத்துள்ள பிரசுரம்:

# போர் நிறுத்த உடன்பாடு கபடத்தனமானது; பொதுமக்கள் இதனை உணர்ந்து நடக்கவேண்டும்

''ஈழமண்ணில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் அரசின் கபடத்தனமான போர் நிறுத்த உடன்படிக்கையின் உண்மை அர்த்தத்தைப் புரிந்து கொண்டு சகல கேளிக்கை, களியாட்டங்கள் பொழுது போக்குகள் போன்றவற்றை நிராகரித்து இறுதியான உறுதியான தீர்வான ஈழப்போராட்டத்திற்கு தயார் படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று மாணவர் இளைஞர் பொது மன்றம் (சுய்ஸ்) நேற்று விநியோகித்த துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போர் நிறுத்தமா? போருக்கான ஆயத்தமா? என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இப்பிரசுரத்தில் போர் நிறுத்தம் போராட்ட முடிவல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது: ஜே. ஆர். அரசின் கபடத்தனமான போர் நிறுத்த உடன்படிக்கை என்பது எமது பறிக்கப்பட்ட உரிமைகளை ஆட்கியாளர்கள் வழங்கப்போவதற்கு அறிகுறி என எமது மக்கள் நினைப்பார்களானால் அவர்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம்.

இந்த நிலையை உண்மையில் போர் நிறுத்தம் என மக்கள் கருதிக் கொண்டால் கிழக்கில் போராளிகளை அடக்குவதற்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்ட போது விமானத்தில் இருந்து விழுந்து மரணமும், போர் ஒத்திகை பற்றிய செய்தியும், பிரித்தானியாவில் இருந்து வரப்போகும் பீரங்கிகள் இணைக்கப்பட்ட ரோந்துப்படகுகளும், பாதுகாப்பு அமைச்சரின் அவசரமான தென்கொரியப் பயணத்தையும் எவ்வாறு போர் நிறுத்தம் எனக் கொள்ள முடியும்?

## இன்றைய உற்சவங்கள்

(புலோலி)

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயம் (சிவன்கோவில்) இவ்வர் தீர்த்த உற்சவம் இன்று நடைபெறுகின்றது.

✻

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு பழனியாண்டவர் கோவில் அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறுகிறது.

## விஞ்ஞானப் பட்டதாரிகளும் நிர்வாக சேவைக்கு தெரிவு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவைக்கு எதிர்காலத்தில் கணிசமான எண்ணிக்கையான விஞ்ஞானப் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு வகை செய்யப்படும்.

நிர்வாக சேவைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவுக்குத் தொழில் நுட்பத் துறைப் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு பொது நிர்வாக அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம, அமைச்சின் செயலாளரான சிறிவர்தனவைப் பணித்துள்ளார்.

## கடத்தியவர்களுக்கு உருக்கமான வேண்டுகோள்

''பெர்னதேத்'' ராண்ஸ்போட்டிற்குச் சொந்தமான இசுசு லொறி 28 ஸ்ரீ 9003 என்னும் இலக்கமுடையது. இனந்தெரியாதவர்களினால் 21-06-1985 ல் செட்டிகுளத்திற்கும் பெரியகட்டுக்குமிடையே கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இதே லொறி சென்ற புரட்டாதி மாதம் சாரதியையும் கிளீனரையும் இனந்தெரியாதவர்களால் இதே இடத்தில் சுட்டுக் கொன்ற பரிதாபகரத்திற்கானது. இதேவேளை இந்த லொறி ஏழை மீனவர்களின் மீன்களைச் சந்தைப்படுத்துவதற்காக கொழும்பு-மன்னார் சேவையில் ''பெர்னதேத்'' எனும் பெயரில் ஓடுகிறது. இந்த லொறியில் வள்ளமும், அவுட்போட் மோட்டர் இரண்டும், வலைப் பார்சல்களும், ரயர், மீன் வெற்றுப் பெட்டிகளும் ஏற்றிவரப்பட்டன. எனவே, இதனைக் கடத்தியவர்கள் தயவுகூர்ந்து மீனவர்களின் நலத்தைக் கருத்திற் கொண்டும் திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம்.

இவ்வண்ணம்,

பிரான்சிஸ் & சன்ஸ்

கடற்கரை வீதி, பருத்தித்துறை. சவுத்பார், மன்னார்.

## ஜம்போ ஜெட் விமான விபத்தில்

## இந்திய விஞ்ஞானியும் மரணம்! மனைவி தற்கொலை முயற்சி?

இந்திய ஜம்போ ஜெட் விமான குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இந்தியாவின் பிரபல்ய விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் நாயுடம்மாவும் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளையில் டாக்டர் நாயுடம்மாவின் மனைவி தீக்காயங்களுடன் நேற்று சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். தமிழ்நாடு சுகாதார அமைச்சர் டாக்டர் ஹண்டே அவரை மருத்துவ மனையில் சென்று பார்வையிட்டார். திருமதி நாயுடம்மாவிற்கு தீக்காயம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பது தெரிவிக்கப்படவில்லையாயினும், தற்கொலை முயற்சியாக இருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகின்றது.

## கல்வியங்காட்டில் தாராள பெற்றோல் விநியோகம்

கல்வியங்காடு சிங்காரவடிவு எரிபொருள் விற்பனை நிலையத்தில் நேற்றும் நண்பகல் முதல் பெற்றோல் கட்டுப்பாட்டு விலையில் லீற்றர் பதின் மூன்று ரூபா ஐம்பது சதப்படி விற்பனை செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து தனியார் வாகனம் மூலம் இங்கு பெற்றோல் தருவிக்கப்பட்டு விற்கப்பட்டது. நேற்று இங்கு எதுவித கட்டுப்பாடுமின்றி பெற்றோல் தாராளமாக விற்கப் பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமையும் இவ்வாறு இங்கு கட்டுப்பாட்டு விலையில் பெற்றோல் விற்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

இருபகுதிப் பிரச்சினையால்

## யாழ் - அச்சுவேலி மினிபஸ் இடைநிறுத்தப் பட்டுள்ளன

யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் அச்சுவேலிப் பகுதிகளுக்கு செல்லும் தனியார் மினி பஸ்களிடையே ஏற்பட்ட பிரச்சினைகளினால் அச்சுவேலி யாழ்ப்பாணம் மினி வான் போக்குவரத்து சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இப்பகுதி மக்கள் தமது பிரயாணத்தை தொடர பருத்தித்துறை - யாழ் பஸ்களையும், மினிவான்களையும் எதிர் பார்த்து இருக்க வேண்டியுள்ளது.

இந்தப்பிரச்சினை பல தடவைகள் ஏற்பட்டும் இதுவரை ஒரு முடிவுக்கும் வரவில்லை. கடந்த வியாழக்கிழமை இந்தப்பாதையால் வந்த மினிவான் பிரயாணிகள் கோப்பாயில் வைத்து இடை வழியில் இறக்கிவிடப்பட்டனர். சில தினங்களுக்கு முன் வேறொரு வானுக்கு கல் வீசப்பட்டது. தற்போதுள்ள நிலையினால் இப்பகுதிமக்கள் சுதந்திரமாக பயணம் செய்ய முடியவில்லை. ''சம்பந்தப்பட்டவர்கள்'' இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டியுள்ளனர்.

### சீக்கிய....

...1ஆம் பக்கத் தொடர்

நிலையங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட விமானத்துள் குண்டிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, இதனைச் செல்லவிடாது மறிக்கப்பட்டதாக லண்டன் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது. ஆனால் இதனை எவரும் ஊர்ஜிதம் செய்யவில்லை.

இதற்கிடையே மூன்றுவது குழுவொன்று கனடிய வானொலி நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு குண்டு வெடிப்புக்கு உரிமை கோரியுள்ளது.

நேற்றிரவு 144 சடலங்கள் கடலிலிருந்து மீட்கப்பட்டன. மரணமானவர்களில் 90 பேரின் உறவினர்கள், சடலங்களை அடையாளம் காட்ட லண்டன் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதுவேளையில் விமானத்தின் ஃபிளைட் றெக்கோடர் கருவியைத் தேடுவதற்காக வீடியோ கமரா போன்ற நவீன அம்சங்களைக் கொண்ட சிறிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இது கடலின் அடியில் சுமார் மூவாயிரம் அடி வரையில் செல்லக் கூடியது.

இவ்சம்பவத்திற்கு பயங்கரவாதிகளின் குண்டு ஒன்றே காரணமாகஇருக்கலாம் என்று அயர்லாந்தின் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து தமிழ் நாடு இரண்டு சபைகளிலும் கடும அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டது. லோக்சபா சபாநாயகர் திரு. பல்ராம் ஜாக்கரும் இச்சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்தார்.

### ஐக்கிய வியாபாரச்...

இங்கு இதுவரை இருபத்தொரு கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன. இதனால் இச் சங்கத்துக்கு பதினறு லட்சம் ரூபா வரை நஷ்டமேற்பட்டுள்ளது.

இதனால் இக்கொள்ளையை நடாத்துபவர்கள் இப்பொருட்களையோ அல்லது அதன் பெறுமதியையோ திருப்பி வழங்குமாறு இந்த ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### தமிழக....

னர் யாழ். பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இந் நூல்களைப் பெறுவதற்காக திரு. சிவஞானம் நேற்று கொழும்பு பயணமானார்.

### மொசாட்....

-1-ஆம் பக்கத் தொடர்

தத் தற்காலிகப் போர் நிறுத்தம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஈழ மண்ணில் இருந்து இராணுவம் வாபஸ் வாங்கும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் போராளிகள் நிகழ்த்து வரும் வீரம் செறிந்த தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத ஆட்சியாளர்கள் போர் நிறுத்தம் என்ற அறிவித்தலை விடுத்துள்ளார்கள்.

போர் நிறுத்தம் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், தமிழ்ப் போராளிகள் சிறைச்சாலைகளில் சித்திரவதை செய்யப்படுவதாகவும், தென்கொரியாவிடம் இருந்து ஆயுதம் வாங்க பாதுகாப்பு அமைச்சர் சென்றுள்ளது பற்றியும் இப் பிரசுரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### கடுமையான ...

— 1ஆம் பக்கத் தொடர்

படும் சகல பொதிகளும் எலக்ரோனிக் எக்ஸ் றே கதிர்களைக் கொண்டு பரிசீலிக்கப்படும்.

### 30,000 கலன் ...

தாயிரம் கலனுமாக மொத்தம் முப்பதாயிரம் கலன் எரிபொருள் கொண்டுவரப்பட்டதாக தெரியவந்துள்ளது.

தற்போது நிலைமை சீராகவிருப்பதால் மற்றுமொரு எண்ணெய் ரயிலை இவ்வார இறுதிக்குள் இங்கு கொண்டு வரவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### பூநகரியில் ....

இத்தாக்குதலை தம்பாபிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான ''தமிழீழ ராணுவ'' பிரிவினர் செய்ததாகவும், மரணமானவர் மூலம் இவ் அடையாளம் காணப்பட்டதாகவும் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஆலாலு தர்மர்,..

திடீர் சுகயீனம் காரணமாக அவரும், திரு. ஆலாலசுந்தரமும் நேற்று முன்தினம் கொழும்பு செல்லவில்லை. திரு அமிர்தலிங்கத்தின் பணிப்பின் பேரில் கூட்டணிப் பிரமுகர்கள் எதிர்க்கட்சியினரைச் சந்திக்க ஏற்பட்டானது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி...

திபதி ஜெயவர்த்தன தமது அதிர்ச்சியைத் தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இலங்கை மக்களின் சார்பிலும் தனது சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

### வாகனம்....

மான வாகனம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

இரண்டு வாரங்களுக்குமுன் இவரால் கடத்திச் செல்லப்பட்ட மேற்படி வாகனம் பலனிதமான பொதுச் சேவைகளுக்காக பயன் படுத்தப் பட்டு வந்தது. சில நலன் விரும்பிகளின் முயற்சியால் சம்பந்தப்பட்டவர்களால், நேற்று இவ்வாகனம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்லர்டைசிங் அசோஸியேட்ர்ஸ் ஸ்தாபனத்தாரால் கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில்